இந்து தமிழ் திசை

### ஆக.11-க்குள் விண்ணப்பிக்கலாம் - செப்டம்பரில் இரு கட்டங்களாக தேர்வு

# ஜிப்மரில் 446 செவிலியர் அதிகாரிகள் பதவிக்கு தகுதித் தேர்வு

**ஏனாம் பகுதிக்கும் 8 பேர் தேர்வு செய்யப்பட உள்ளனர்**

■ புதுச்சேரி

புதுச்சேரி ஜிப்மர் மற்றும் ஏனாம் பகுதிக்கு சேர்த்து 454 செவிலியர் அதிகாரி பணியிடங்களுக்கு ஆட்கள் தேர்வு செய்யப்பட உள்ளனர். இதற்கான தகுதித் தேர்வுக்கு ஆன்லைன் மூலம் ஆகஸ்ட் 11-க்குள் விண்ணப் பிக்கலாம். செப்டம்பரில் இரண்டு கட்டங்களாக இதற்கான தேர்வு நடக்கிறது.

நாடு முழுவதும் உள்ள எய்ம்ஸ் மற்றும் ஜிப்மர் உள்ளிட்ட மருத்துவமனைகளில் செவிலியர் அதிகாரி பணியிடங்கள் 3,500-ஐ நிரப்ப அறிவிப்பு வெளியாகியுள்ளது. இதற்கான நுழைவுத் தேர்வை எய்ம்ஸ் நடத்துகிறது.

எய்ம்ஸ் மருத்துவமனை போன்று தேசிய முக்கியத்துவம் வாய்ந்த புதுவை ஜிப்மர் மருத்துவமனையும் விரிவாக்கம் செய்யப்பட்டுவருகிறது. இதற்காக ஜிப்மர் மருத்துவமனையில் புதிய மருத்துவ பணியிடங்களை அதிகரிக்க அதன் நிர்வாகம் முடிவு செய்து, மத்திய சுகாதார அமைச்சகத்துக்கு இதற்கான கோப்பு அனுப்பப்பட்டது. மொத்தம் 947 பணியிடங்களை புதிதாக உருவாக்க கோப்பு அனுப்பப்பட்டதில், 557 பணியி டங்களை உருவாக்க மத்திய சுகாதார அமைச்சகம் அனுமதி அளித்துள்ளது.

இதில் தற்போது ஜிப்மர் மருத்துவமனைக்கு 446 மற்றும் ஏனாம் பகுதியில் பணியாற்ற 8 பேர் என 454 செவிலியர் அதிகாரி பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன.

இந்த செவிலியர் அதிகாரி ஆட்சேர்ப்பு செய்ய பொது தகுதித்தேர்வுக்கு விண்ணப்பிப் போர் 18 முதல் 30 வயதுக்குள் இருக்க வேண்டும். ஆன்லைன் மூலம் (www.aiimsexams.ac.in) விண்ணப்பங்களை வரும் ஆக. 11-ம் தேதி மாலை 5 மணிக்குள் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பக் கட்டணம் பொது மற்றும் ஓபிசி பிரிவுக்கு ரூ. 3 ஆயிரம், எஸ்சி, எஸ்டி மற்றும் இடபுள்யூஎஸ் பிரிவுக்கு ரூ. 2,400 செலுத்த வேண்டும். தவறான தகவல் ஏதும் கண்டறியப்பட்டால் விண்ணப்பம் நிராகரிக்கப்படும். ஆன்லைனில் முதல்நிலைத்தேர்வு செப். 14-ம் தேதியன்றும், மெயின் தேர்வு செப். 27-ம் தேதியன்றும் நடக்கும். கூடுதல் தகவல் அறிய விரும்புவோர் ஜிப்மர் இணையத்தில் வேலைவாய்ப்பு பிரிவை பார்வையிடலாம்.

புதுச்சேரியில் பொதுப்பிரிவில் 180 இடங்கள் (பெண்-144, ஆண்-36), ஓபிசி 121 இடங்கள் (பெண்கள் 97, ஆண்-24), எஸ்சி பிரிவில் 63 இடங்கள் (பெண் 51, ஆண்-12), எஸ்டி பிரிவில் 33 இடங்கள் ((பெண் 27, ஆண் 6), இடபுள்யுஎஸ் 49 இடங்கள் (பெண்கள் 40, ஆண்கள் 9) என மொத்தம் 446 இடங்களை நிரப்ப தேர்வு நடக்கும்.

இதில் உள் ஒதுக்கீட்டில் மாற்றுத்திறனாளிகளுக்கு 39 இடங்கள் (பெண்கள் 32, ஆண்கள் 7) வழங்கப்படும்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

# ஜிப்மரில் 454 நர்சிங் அதிகாரி பணி

## விண்ணப்பிக்க ஆகஸ்டு 11–ந்தேதி கடைசி நாள்

புதுச்சேரி, ஜூலை.26-
புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் 454 நர்சிங் அதிகாரி பணிக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. விண்ணப்பிக்க அடுத்த மாதம் 11-ந் தேதி கடைசி நாளாகும்.

### ஜிப்மர்

டெல்லியில் உள்ள எய்ம்ஸ் மருத்துவமனை போன்று தேசிய முக்கியத்துவம் வாய்ந்த புதுவை ஜிப்மர் மருத்துவமனையும் விரிவாக்கம் செய்யப்பட்டு வருகிறது. இங்கு புதிய மருத்துவ பணியிடங்களை அதிகரிக்க ஜிப்மர் நிர்வாகம் முடிவு செய்தது.

அதன்படி மொத்தம் 947 பணியிடங்களை புதிதாக உருவாக்கி அதற்கான கோப்பை மத்திய சுகாதாரத்துறை அமைச்சகத்திற்கு ஜிப்மர் அனுப்பியது. இதனை ஏற்று 557 பணியிடங்களை உருவாக்க மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதில் 454 நர்சிங் அதிகாரி பணியிடங்களாகும். அதாவது புதுச்சேரியில் 446 பணியிடங்களும், ஏனாம் ஜிப்மர் கிளைக்கு 8 இடங்களும் என மொத்தம் 454 பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன.

### ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்கலாம்

இந்த பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிப்பு தற்போது வெளியிடப்பட்டு, விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. நர்சிங் அதிகாரி பணிகள், தகுதி தேர்வு மூலம் நிரப்பப்பட உள்ளது. இதற்கு விண்ணப்பிப்போர் 18 முதல் 30 வயதுக்குள் இருக்கவேண்டும்.

ஆன்லைன் (www.aiimsexams.ac.in) மூலம் விண்ணப்பங்களை அடுத்த மாதம் (ஆகஸ்டு) 11-ந்தேதி மாலை 5 மணிக்குள் விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பத்தில் தவறான தகவல் ஏதும் கண்டறியப்பட்டால் உடனடியாக விண்ணப்பம் நிராகரிக்கப்படும். ஆன்லைன் மூலமாக முதல்நிலைத்தேர்வு வருகிற செப்டம்பர் மாதம் 14-ந் தேதியும், மெயின் தேர்வு செப்டம்பர் 27-ந்தேதியும் நடைபெற உள்ளது. இந்த தகவலை அகில இந்திய மருத்துவ அறிவியல் நிறுவனம் தெரிவித்துள்ளது.

தினகரன்

ஜிப்மர் மருத்துவமனையில்

# 454 செவிலியர் பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்பு

## செப்.14ல் முதல் நிலை தேர்வு

புதுச்சேரி, ஜூலை 26: ஜிப்மர் புதுச்சேரி-446, ஏனாம்-8 என மொத்தமாக 454 செவிலியர் பணியிடங்களை தகுதி தேர்வு மூலம் நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டுள்ளது.

எய்ம்ஸ், ஜிப்மர், இஎஸ்ஐசி உள்ளிட்ட 26 மருத்துவமனைகளில் 3,500 செவிலிய அதிகாரிகள் பணியிடங்கள் பொது தகுதி தேர்வு மூலம் நிரப்பப்படவுள்ளது.

இதன் ஒரு பகுதியாக, ஜிப்மர் மருத்துவமனையில் புதுச்சேரி-446, ஏனாம்-8 என 454 செவிலிய அதிகாரி பணியிடங்கள் நிரப்புவதற்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது. புதுச்சேரியில் பொதுப்பிரிவில் 180 இடங்களும் (பெண்-144, ஆண்-36), ஓபிசி 121 இடங்களில் (பெண்கள்-97, ஆண்-24), எஸ்சி பிரிவில் 63 இடங்களும் (பெண்-51, ஆண்-12), எஸ்டி பிரிவில் 33 இடங்களும் ((பெண்-27, ஆண்-6), இடபுள்யூஎஸ் 49 இடங்களில் (பெண்கள்-40, ஆண்கள்-9), மாற்றுத்திறனாளிகள் பிரிவில் 39 இடங்களும் (பெண்கள்-32, ஆண்கள்-7) என மொத்தம் 446 இடங்கள் நிரப்பப்படவுள்ளது. ஏனாமில் பொது-2, ஓபிசி-4, எஸ்சி-1, எஸ்டி-1 என 8 இடங்கள் நிரப்பப்படவுள்ளது.

இந்த செவிலிய அதிகாரி பணிக்கான பொது தகுதித்தேர்வுக்கு விண்ணப்பிப்போர் 18 முதல் 30 வயதுக்குள் இருக்க வேண்டும். இதில் ஓபிசி பிரிவினருக்கு 3 ஆண்டுகளும், எஸ்சி, எஸ்டி பிரிவினருக்கு 2 ஆண்டுகளும், மாற்றுத்திறனாளிகளுக்கு 10 ஆண்டுகளும், ஓபிசி மாற்றுத்திறனாளிகளுக்கு 13 ஆண்டுகளும், எஸ்சி, எஸ்டி மாற்றுத்திறனாளிகளுக்கு 15 ஆண்டுகளும் வயது வரம்பில் தளர்வு அளிக்கப்பட்டுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனம் மற்றும் பல்கலைக்கழகத்தில் பிஎஸ்சி நர்சிங் படித்திருக்க வேண்டும்.

அல்லது ஜிஎன்எம் படித்தவர்கள் மருத்துவமனையில் 2 ஆண்டுகள் பணிபுரிந்த அனுபவம் பெற்றிருக்க வேண்டும். ஆன்லைன் விண்ணப்ப கட்டணமாக பொது பிரிவு, ஓபிசி பிரிவினர் ரூ.3,000, எஸ்சி, எஸ்டி, இடபிள்யூஎஸ் பிரிவினர் ரூ.2,400 செலுத்த வேண்டும்.

*www.aiimsexams.ac.in* என்ற இணையதளத்தில் விண்ணப்பங்களை வரும் ஆகஸ்ட் 11ம் தேதி மாலை 5 மணிக்குள் விண்ணப்பிக்கலாம். தவறான தகவல் ஏதும் கண்டறியப்பட்டால் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

ஆன்லைனில் முதல் நிலை தேர்வு செப்டம்பர் 14ம் தேதியும், மெயின் தேர்வு செப்டம்பர் 27ம் தேதியும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.